**ஜனவரி – 15**

# TNPSC துளிகள்

- பிரதமர் மோடியின் வாழ்க்கை வரலாறு குறித்த ‘கர்மயுத்த கிரந்த்’ என்ற ஒரு புத்தகத்தை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா வெளியிட்டுள்ளார்.
- லடாக்கில் நடைபெற்ற ஏழாவது தேசிய ஐஸ் ஹாக்கி சாம்பியன்ஷிப் பெண்கள் கோப்பையை லடாக் அணி வென்றது.
- லோக்பால் உறுப்பினரும் அலகாபாத் உயர் நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதியுமான நீதிபதி திலீப் பாபாசாகேப் போஷ்லே தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.
- இந்தியப் போட்டி ஆணையமானது “இந்தியாவில் மின்னணு வணிகம் குறித்த சந்தை ஆய்வு: முக்கியக் கண்டுபிடிப்புகள் மற்றும் குறிப்புகள்” என்ற தலைப்பில் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- மாநில வரி ஆணையர்கள் மற்றும் மத்தியத் தலைமை வரி ஆணையர்கள் ஆகியோர் பங்கேற்ற தேசிய ஜிஎஸ்டி மாநாட்டின் இரண்டாவது பதிப்பானது புது தில்லியில் நடத்தப் பட்டது.

# தேசியச் செய்திகள்

## குற்றம் தொடர்பான NCRB அறிக்கை

- தேசியக் குற்ற ஆவணக் காப்பகமானது (National Crime Record Bureau - NCRB) 2018 ஆம் ஆண்டில் இந்தியாவில் நடைபெற்ற குற்றங்கள் குறித்த அறிக்கையினை வெளியிட்டுள்ளது.
- 2018 ஆம் ஆண்டில் 50 லட்சத்துக்கும் மேற்பட்ட குற்றங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக இந்த அறிக்கை கூறியுள்ளது. இது 2017 ஆம் ஆண்டை விட 1.3% அதிகமாகும்.

### *அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள்*

- 2018 ஆம் ஆண்டில் அதிகபட்சமாக பொருளாதாரக் குற்றங்களைப் பதிவு செய்துள்ள மாநிலமாக உத்தரப் பிரதேசம் இருக்கின்றது.
- அதைத் தொடர்ந்து முறையே 2, 3, 4 மற்றும் 5வது தர வரிசையில் ராஜஸ்தான், மகாராஷ்டிரா, தெலுங்கானா மற்றும் பீகார் ஆகிய மாநிலங்கள் உள்ளன.
- ஆட்கடத்தல் மற்றும் வலுக்கட்டாயமாகக் கடத்தல் ஆகிய குற்றங்கள் முறையே 13.8% மற்றும் 10.2% ஆக இருந்தன.
- 2018 ஆம் ஆண்டில் குழந்தைகளைக் கடத்தல் மற்றும் வலுக்கட்டாயமாகக் கடத்தல் ஆகியவை 44.2% ஆகவும் 2012 ஆம் ஆண்டு போக்சோ சட்டத்தின் கீழ் சிறுவர் கற்பழிப்புகள் உள்ளிட்ட பதிவு செய்யப்பட்ட வழக்குகளானவை 34.7% ஆகவும் உள்ளன.
- 2017 ஆம் ஆண்டில், பொருளாதாரக் குற்றங்களைப் பதிவு செய்துள்ள மாநிலங்களில் ராஜஸ்தான் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் அதிக பங்கைக் கொண்டிருந்தன.

## இணைய நெறிமுறை அடிப்படையிலான காணொளி கண்காணிப்பு அமைப்பு

- செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்ட முகம் அடையாளம்

காணும் தொழில்நுட்பமானது பெங்களூரு, மன்மத் மற்றும் பூசாவல் ஆகிய ரயில் நிலையங்களில் சோதனை அடிப்படையில் நிறுவப்பட்டுள்ளது.

- முக அடையாளம் காணும் முறையை ஏற்கனவே உள்ள தரவுதளங்களுடன் இணைத்து குற்றவாளிகளை அடையாளம் காண்பதே ரயில்வே பாதுகாப்புப் படையின் நோக்கமாகும்.
- இந்திய ரயில்வே அமைப்பானது ரயில் நிலையங்களில் இணைய நெறிமுறை அடிப்படையிலான காணொளி அமைப்புகளை நிறுவும் பணியில் ஈடுபட்டுள்ளது.

## பரஸ்பர சட்ட உதவி ஒப்பந்தங்களுக்கான திருத்தப்பட்ட வழிகாட்டுதல்கள்

- குற்றங்களுக்கு எதிரான சுழிய சகிப்புத்தன்மை என்னும் இந்திய அரசாங்கத்தின் கொள்கையின் கீழ் பிற நாடுகளுடனான குற்றவியல் விவகாரங்களில் பரஸ்பர சட்ட உதவி மற்றும் நீதி வழங்குவதை விரைவுபடுத்துவதற்காக மத்திய உள்துறை அமைச்சகமானது திருத்தப்பட்ட வழிகாட்டுதல்களை வெளியிட்டுள்ளது.
- இது தொடர்பாக, குற்றவியல் விவகாரங்களில் ஒத்துழைப்பு நல்குவதற்காக, 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இந்தியா 42 நாடுகளுடன் பரஸ்பர சட்ட உதவி ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது.
- மத்திய உள்துறை அமைச்சகமானது அதற்காகவே 'இந்திய மத்திய ஆணையம்' என்னும் அமைப்பினை நியமித்துள்ளது.

## மாதவ்பூர் மேளா திருவிழா

- குஜராத்தின் மாதவ்பூர் மேளாவின் வருடாந்திர திருவிழாவானது 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் 2 ஆம் தேதி குஜராத்தின் போர்பந்தர் மாவட்டத்தில் உள்ள மாதவ்பூர் கெட் என்னும் இடத்தில் நடைபெறும்.
- ஏழு நாட்கள் நடைபெறும் இந்தத் திருவிழாவில் மக்கள் அருணாச்சலப் பிரதேசத்திலிருந்து குஜராத்திற்கு வருகை புரியும் பகவான் கிருஷ்ணர் மற்றும் ருக்மிணியின் சிறப்புகள் குறித்து கொண்டாடுகின்றனர்.
- இந்த விழாவில் எட்டு வடகிழக்கு மாநில மக்கள் பங்கேற்கின்றனர்.
- இந்தத் திருவிழாவானது அருணாச்சலப் பிரதேசத்தின் புகழ்பெற்ற மன்னர் பீஷ்மக்கின் வம்சாவளியான மிஷ்மி பழங்குடியினருடனான தொடர்பைப் பகிர்ந்து கொள்கின்றது.
- இது குஜராத் மாநிலத்தின் கலாச்சார ஒருங்கிணைப்பை "ஒரே பாரதம் - உன்னத பாரதம்" என்ற திட்டத்தின் கீழ் வடகிழக்கு மாநிலங்களின் கலாச்சாரங்களுடன் இணைக்கின்றது.

# சர்வதேசச் செய்திகள்

## உலகளாவியப் பொருளாதார வாய்ப்பு அறிக்கை

- உலக வங்கியானது 2020 ஆம் ஆண்டிற்கான உலகளாவியப் பொருளாதார வாய்ப்பு என்ற அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- அதன் முன்கணிப்பின்படி, உலக நாடுகளானவை 2.5% என்ற விகிதத்தில் பொருளாதார ரீதியாக வளர்ச்சியடையும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- வளரும் நாடுகளில் உள்ள வளர்ந்து வரும் சந்தைகள் குறித்த அறிக்கையின்படி

அவற்றின் வளர்ச்சியானது அதிகரிக்குமே அன்றி மற்றவற்றின் வளர்ச்சியானது (மற்ற நாடுகள்) அதிகரிக்காது.

- இந்த அறிக்கையின் படி தெற்காசியாவின் வளர்ச்சியானது 2020 ஆம் ஆண்டில் 5.5% ஆக உயரும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது.
- இந்த அறிக்கையானது இந்தியாவின் வளர்ச்சி விகிதத்தை 5% என்று கணித்துள்ளது. மேலும் அடுத்து வரும் ஆண்டில் இந்தியா 5.5% வளர்ச்சி விகிதத்தை அடையும் என எதிர்பார்க்கப் படுகின்றது.
- 2020 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் வளர்ச்சியானது 1.8% ஆக அதிகரிக்கும் என்றும், ஐரோப்பிய ஒன்றியத்தின் வளர்ச்சியானது 1% என்ற அளவில் குறையும் என்றும் எதிர்பார்க்கப் படுகின்றது.

# பொருளாதாரச் செய்திகள்

## எஸ்பிஐ வங்கியின் புதிய RBBG திட்டம்

- ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா (எஸ்பிஐ) வங்கியானது “வாங்குபவர்களின் உத்தரவாதத்துடன் கூடிய குடியிருப்பாளர் கட்டமைப்பு நிதி” (Residential Builder Finance with Buyer Guarantee - RBBG) என்ற ஒரு புதிய திட்டத்தை அறிவித்துள்ளது.
- இந்தப் புதிய திட்டத்தின் நோக்கமானது எஸ்பிஐ வங்கியின் வீட்டுக் கடன்களைப் பெறும் வாடிக்கையாளர்களுக்கு அவர்களது வீடு கட்டும் திட்டங்களை நிறைவேற்றுவதற்கான உத்தரவாதத்தை வழங்குவதன் மூலம் வீடு வாங்குபவர்களை நிதியுதவி ரீதியாகப் பாதுகாப்பதாகும்.
- எஸ்பிஐ வாடிக்கையாளர்களின் தற்போதைய வீட்டு வசதித் திட்டங்களுக்கு இந்த வங்கியே நிதியுதவி அளிக்க உள்ளது.



SBI launches RBBG scheme for home buyers

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

## விக்ரம் சாராபாய் குழந்தைகள் புத்தாக்க மையம்

- குஜராத் மாநில அரசானது விக்ரம் சாராபாய் குழந்தைகள் புத்தாக்க மையத்தை அமைக்க உள்ளது.
- இந்த மையமானது மாநிலத்தில் உள்ள 18 வயது வரையிலான குழந்தைகளின் கண்டுபிடிப்புகளை அடையாளம் காண்பதையும், அவர்களின் முயற்சிகளை வளர்ப்பதையும், ஊக்குவிப்பதையும் நோக்கமாக உள்ளது.
- இந்தப் புத்தாக்க மையமானது குஜராத் பல்கலைக்கழகத்தின் விரிவாக்க ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புகளுக்கான டாக்டர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் மையத்தின் கீழ் செயல்பட உள்ளது.
- இது குஜராத் பல்கலைக்கழகம் மற்றும் ஐக்கிய நாடுகளின் சர்வதேச குழந்தைகளின்

அவசர கால நிதியம் (யுனிசெஃப்) ஆகியவற்றின் ஒரு கூட்டு முன்னெடுப்பு ஆகும்.

### புதிய தகவல் தொடர்பு சோதனை செயற்கைக் கோள் - TJSW5

- சீனா தனது லாங் மார்ச் -3 பி செயற்கைக் கோள் தாங்கி விண்கலன் மூலம் டோங்க்சின் ஜிஷூ ஷியான் வெய்சிங் 5 (Tongxin Jishu Shiyan Weixing 5 - TJSW5) என்ற புதிய தகவல்தொடர்பு தொழில்நுட்பச் சோதனை செயற்கைக் கோளை வெற்றிகரமாக விண்வெளிக்கு ஏவியுள்ளது.
- இது செயற்கைக் கோள் தாங்கி விண்கலனான லாங் மார்ச் தொடர் வரிசையின் 324வது பணியாகும்.
- இது தகவல் தொடர்பு, வானொலி, தொலைக்காட்சி மற்றும் தரவு பரிமாற்றம் & உயர் செயல்திறன் தொழில்நுட்பச் சோதனைகளில் பயன்படுத்தப்படும்.
- சமீபத்தில் சீனா தனது மிகப் பெரிய மற்றும் மேம்பட்ட தகவல் தொடர்பு செயற்கைக் கோளான ஷிஜியன் - 20ஐ அதன் மிகப்பெரிய புதிய செயற்கைக் கோள் தாங்கி விண்கலனான லாங் மார்ச் - 5 உடன் விண்வெளிக்கு ஏவியது.

## பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

### ஐக்கிய இராஜ்ஜிய நாடுகளின் கோஸ்டா குழந்தைகள் விருது - 2019


- இந்திய வம்சாவளியைச் சேர்ந்த இங்கிலாந்து எழுத்தாளரான ஜஸ்பிந்தர் பிலன் என்பவர் 2019 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய இராஜ்ஜிய நாடுகளின் குழந்தைகள் புத்தக விருதான "கோஸ்டா குழந்தைகள் விருதை" பெற்றுள்ளார்.
- இந்த விருதானது 9 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட வயது வரம்பில் உள்ள வாசகர்களை மையமாகக் கொண்ட அவரது முதலாவது நாவலான 'ஆஷா அண்ட் தி ஸ்பிரிட் பேர்ட்' (Asha and the Spirit Bird) என்னும் நாவலுக்கு வழங்கப்பட்டது.
- இந்த விருதானது ஆண்டுதோறும் "முதலாவது நாவல், நாவல், சுயசரிதை, கவிதை மற்றும் குழந்தைகள் புத்தகம்" என்ற 5 பிரிவுகளில் வழங்கப் படுகின்றது.



# இதரச் செய்திகள்

## வேகமாக வளர்ந்து வரும் நகர்ப்புறப் பகுதிகள்/நகரங்கள்

- பொருளாதார நுண்ணறிவுப் பிரிவானது உலகில் வேகமாக வளர்ந்து வரும் நகர்ப்புறப் பகுதிகள்/நகரங்களின் அடிப்படையில் சமீபத்திய தர வரிசையை வெளியிட்டுள்ளது.
- இந்த அறிக்கையின் படி கேரளாவின் 3 நகரங்கள் முதல் 10 இடங்களில் இடம் பிடித்தன.
- கேரளாவின் மலப்புரம் நகரம் இந்தப் பட்டியலில் முதலிடத்தையும், கேரளாவின் கோழிக்கோடு மற்றும் கொல்லம் ஆகிய நகரங்கள் முறையே 4வது மற்றும் 10வது இடங்களையும் பிடித்தன.
- வியட்நாமின் கான் தோ பகுதியானது உலக அளவில் இரண்டாவது இடத்திலும், சீனாவின் சுகியன் பகுதியானது மூன்றாவது இடத்திலும் உள்ளன.
- இந்தப் பட்டியலானது ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகைப் பிரிவு வழங்கிய தரவுகளின் அடிப்படையில் தொகுக்கப் பட்டது.




## ஃபோர்ப்ஸ் இந்தியாவின் 20 பேர்


- ஃபோர்ப்ஸ் இந்தியாவின் '2020 ஆம் ஆண்டில் கூர்ந்து கவனிக்கப்பட்ட 20 பேர்' என்னும் பட்டியலில் இந்தியாவிலிருந்து 7 நபர்கள் இடம் பிடித்துள்ளனர்.
- இந்தப் பட்டியலில் அமெரிக்காவைச் சேர்ந்த இந்திய வம்சாவளியினரான ஹசன் மின்ஹாஜ் என்பவர் முதலிடத்திலும், கென்யாவின் மராத்தான் ஓட்டப்பந்தய வீரரான எலியுட் கிப்கோஜ் என்பவர் இருபதாவது இடத்திலும் உள்ளனர்.
- பின்வரும் 7 இந்தியர்கள் இந்தப் பட்டியலில் இடம் பிடித்துள்ளனர்

| பெயர் | நிலை | தொழில் |
|---|---|---|
| **ஆதித்யா மிட்டல்** | 2 | தலைமை நிதி அதிகாரி மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி, ஆர்சலர் மிட்டல் ஐரோப்பா |
| **கோத்ரேஜ் குழுமம்** | 6 | ஆதி கோத்ரேஜ் |

| | | |
|---|---|---|
| **துஷ்யந்த் சவுதலா** | 7 | துணை முதல்வர், ஹரியானா |
| **மஹுவா மொய்த்ரா** | 9 | மக்களவை உறுப்பினர், திரிணாமுல் காங்கிரஸ் |
| **பிரசாந்த் கிஷோர்** | 12 | தேர்தல் உத்தி வகுப்பவர் மற்றும் ஒன்றிணைந்த ஜனதா தளம் கட்சியின் தேசிய துணைத் தலைவர் |
| **கரிமா அரோரா** | 14 | தலைமை சமையல்காரர், மிச்செலின் ஸ்டார் என்னும் சிறப்புத்துவம் பெற்ற முதல் இந்தியப் பெண் |
| **கன்னையா குமார்** | 16 | முன்னாள் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழக மாணவர் சங்கத் தலைவர் |

## ஹென்லி கடவுச்சீட்டுக் குறியீடு - 2020

- சர்வதேச விமானப் போக்குவரத்துச் சங்கத்திலிருந்துப் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில், 2020 ஆம் ஆண்டிற்கான ஹென்லி கடவுச்சீட்டுக் குறியீடானது ஹென்லி & பார்ட்னர்ஸ் என்னும் அமைப்பால் வெளியிடப்பட்டது.
- இந்தியக் கடவுச்சீட்டானது உலகின் மிக சக்திவாய்ந்த கடவுச்சீட்டுப் பட்டியலில் 84வது இடத்தில் உள்ளது.




- 2019 ஆம் ஆண்டில் 82வது இடத்தைப் பெற்றிருந்த இந்தியா தற்போது 2 இடங்கள் சரிவை எதிர்கொண்டுள்ளது.
- 58 நாடுகளுக்கு நுழைவு இசைவு அற்ற (விசா அல்லாத) அணுகலை இந்தியா வழங்குகின்றது.
- இந்தப் பட்டியலில் ஜப்பான் நாட்டின் கடவுச்சீட்டு முதலிடத்திலும் ஆப்கானிஸ்தானின் கடவுச்சீட்டானது கடைசி இடத்திலும் உள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★